NOOLAHAM FOUNDATION

**நூலக நிறுவனம்**

**மாதாந்த அறிக்கை – ஏப்ரல் 2018**

**வணக்கம்**

நூலக நிறுவனத்தின் 2018 ஏப்ரல் மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

### எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 408 | 22,626 |
| பக்கம் தவறியவை | 6 | 1,428 |
| தரமேம்படுத்தல் | 2 | 404 |
| மொத்தம் | 416 | 24,458 |

### எண்ணிம நூலகம் (Digital Library)

- கொக்குவில் அலுவலக கிளையில் இம்மாதம் 400 ஆவணங்கள் 24,078 பக்கங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- யாழ் பல்கலைக்கழக ஆவணவாக்கலில் இம்மாதம் 18 ஆவணங்கள் 614 பக்கங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- ஆவணங்களுக்கான 229 பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.
- ஆவணங்களுக்கான 339 கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது.
- ஆவணவாக்கலின் முக்கியம் கருதி பக்கம் தவறியவை மற்றும் சிதைந்தவைகளும் தொடர்ந்தும் ஆவணமாக்கப்படுகின்றது.
- இம் மாதம் 02 ஆவணங்கள் 234 பக்கங்கள் இரு முறை மின்வருடப்பட்டுள்ளது.

### சேகர அபிவிருத்தி (Collections Development)

இம் மாதம் கந்தப்பு நடராசா, சம்மாந்துறை சாஹிர், ந.நகுலசிகாமனி, கைலைநாதர், சசூலன் ஆகியோரது ஆவணங்களும் பரணீதரனால் கொண்டுவரப்பட்ட யா/திருக்குடும்பக் கன்னியர் மடம், யா/நாரந்தனை றோ.க.மகாவித்தியாலயம், புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்துறை, யா/அல்லைப்பிட்டி றோ.க.த.க. வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, யா/வடமராட்சி இந்து

மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலை ஆவணங்களும் மின்வருடப்பட்டுள்ளது. ஆவணங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

### ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)

ஏப்ரல் மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணமாக்குவதற்கான அனுமதியினை பதிவு செய்துள்ளனர்.

- வெளியீட்டாளர்கள்
    - Ethir Kaalam Paper
- எழுத்தாளர்கள்
    - Mahesan, Rasanathan
    - Rita, Fatimaharan
    - Soosaipillai, Joshph
    - Thiruchchelvam,Thirukkumaran
    - Venthanar, K.
    - Sellathamby, Sriskandarajah
    - Prabakaran, T
    - Mugundan, Suntharalingam
    - Balendra, K.
    - Deebadharshana, R.
    - Stella, M.
    - Florida, S.
    - Jayarubini,N.
    - Nawaneethakrishnan, V.
    - Sarojini Subramaniyan
    - Krishna Prasanth,S.
    - Sinvaganam, Diroshini
    - Sri Murukan Krishanthini
    - Paramanathan Pavithraa
    - Nallusaamy Abilasiny
    - Thankavel Thivjapriya
    - Velauthan Sasikala
    - Pushparaj Thulanjali
    - Rameshwaran, P.
    - Karunanithy, V.
    - Homiawathy, N.
    - MTM Yoonus

### காப்புப்படி (Backup)

53701-54100 வரையான ஆவணங்கள் அனைத்தும் வன்தட்டுக்களில் காப்புப்படி எடுக்கப்பட்டுள்ளது.

### Master-files and Applications Backup

இம்மாதம் எடுக்கப்படவில்லை.

**ஆவணகம் வலைத்தளம் (aavanaham.org)**

ஆவணகம் (aavanaham.org) வலைத்தளத்தில் ஏப்ரல் மாதம் கீழ்வரும் விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

| **வகை** | **எண்ணிக்கை** |
|---|---|
| நூற்பட்டியல் | |
| மேற்கோள்கள் | 01 |
| படங்கள் | 348 |
| குறுங்கால ஆவணம் | 68 |
| நிகழ்ப்படம் (காணொளிகள்) | 01 |
| எழுத்தாவணம் | 09 |
| ஒலிச் சேகரங்கள் | 15 |
| கையெழுத்தாவணம் | 46 |
| ஆய்வுப் பொருட்சேகரங்கள் | 03 |
| வாய் மொழி வரலாறுகள் | 19 |

**பயனர் சேவை (User Service)**

- எண்ணிம நூலக வலைத்தளத்தில் (www.noolaham.org) இம்மாதம் 17,924 பயனர்களால் 184,810 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 72% புது வாசகர்களும் 28% ஏற்கனவே உள்ள வாசகர்களும் பயன்படுத்தியுள்ளனர்.
- ஆவணக வலைத்தளத்தில் (aavanaham.org) இம்மாதம் 1,718 பயனர்களால் 11,495 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 84.6% புது பயனாளர்களும் 15.4% ஏற்கனவே உள்ள பயனாளர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

**செயற்றிட்டங்கள் (Projects)**

**1. EAP**

இம்மாதத்திற்கான (சித்திரை மாதம்) EAP 1056 செயற்திட்டத்திற்கு அமைவாக கள ஆய்வாளர்களின் களாய்வு அடிப்படையில் கல்லியங்காடு, சுன்னாகம், தெல்லிப்பழை, மாவிட்டபுரம், வண்ணார் பண்ணை ஆகிய இடங்களில் கிடைக்கப்பட்ட ஓலைச்சுவடிகள் சுத்தம் செய்யப்பட்டு 2370 சுவடிகள் எண்ணிமப்படுத்தப்பட்டது. சேகரிக்கப்படும் சுவடிகள் சுத்தம் செய்யப்பட்டு மாதத்திற்கு 2500 சுவடிகள் எண்ணிமப்படுத்துவது எமது இலக்காகும்.

**2. தொழிற்கலை ஆவணப்படுத்தல்**

இம்மாதத்திற்கான (சித்திரை மாதம்) தொழிற்கலை ஆவணப்படுத்தல் செயற்திட்டத்திற்கு அமைவாக மட்பாண்ட கைத்தொழில் தொழிற்கலை ஆவணப்படுத்தப்பட்டது. மட்பாண்ட தொழிற்கலை தொடர்பான காணொளி மற்றும் புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டது. கிழக்கில் 08 மற்றும் வடக்கில் 02 களப்பணிகள் செய்யப்பட்டன.

**3. வாழ்க்கை வரலாற்று ஆவணப்படுத்தல்**

இம்மாதத்திற்கான (சித்திரை மாதம்) வாழ்க்கை வரலாற்று ஆவணப்படுத்தல் செயற்திட்டத்திற்கு அமைவாக சித்திரை மாத கள ஆய்வின்படி 09 வாய்மொழி வரலாறுகள் பதிவுசெய்யப்பட்டன. இம் மாத வாய்மொழி வரலாற்று ஆவணப்பதிவு பரணூதரன், பிரபாகர், கனோல்ட் டெல்சன், கேசவன், ஆர்த்தியா ஆகியோரால் மேற்கொண்டு பதிவு செய்யப்பட்டது. கிழக்கில் 03 வாய்மொழி வரலாறுகள் மற்றும் 02 இட வரலாறுகள் பதிவுசெய்யப்பட்டன.

**வழிகாட்டுநர் சபை (Regulatory Board)**

இம்மாதம் இடம்பெற்ற கூட்டத்திற்கான இணைப்பு.

- ஏப்ரல் 22, 2018

https://docs.google.com/document/d/1UCYkbwzOZIDmQNw9Yh6YDAP5hVglvbK16rWh816-ii4/edit

**வரவு செலவு அறிக்கை (Financial Statement)**

- ஏப்ரல் மாதத் தேவைகளுக்காக ரூ. 510,711.32 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் ரூ. 160,829.00, மின்சாரம் ரூ. 4,320.90, தொடர்பாடல் ரூ. 8,508.42, வாடகை ரூ. 30,000.00, நிருவாகச் செலவு ரூ. 23,400.00, செயற்றிட்டச் செலவு ரூ. 242,800.00 (EAP ரூ. 147,160.00 மற்றையவை ரூ. 95,640.00) மற்றும் ஏனைய செலவுகள் ரூ. 40,853.00 ஆகியன உள்ளடங்குகின்றன.
- ஏப்ரல் மாதம் லண்டன் அன்பர்கள் ஊடாக ரூ. 835,100.00, ஐக்கிய அமெரிக்கா அன்பர்கள் ஊடாக ரூ. 150,000.00, இலங்கை அன்பர்கள் ஊடாக ரூ. 15,000.00 மற்றும் ஏனைய அன்பர்கள் ஊடாக ரூ. 80,000.00 நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகின்றது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.